THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE3(B)-Fundamentals of Law

## March 2018

All Rights Reserved

# பிரிவு 01

**விடை 01**

1.1

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 1.1.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 6 |
| **சரியான விடை: C** |

1.2

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 2.1.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 34 |
| **சரியான விடை : C** |

1.3

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 3.4.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 92/93 |
| **சரியான விடை : A** |

1.4

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 3.6.1/9.1.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 253 |
| **சரியான விடை : C** |

1.5

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 4.1.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 104 |
| **சரியான விடை : C** |

1.6

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 5.6.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 138 |
| **சரியான விடை : D** |

1.7

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 5.7.5 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 147 |
| **சரியான விடை : C** |

NOT FOR SALE

1.8

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 7.3.2 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 204 |
| **சரியான விடை : A** |

1.9

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 7.4.2 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 215/216 |
| **சரியான விடை : C** |

1.10

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 8.2.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 228 |
| **சரியான விடை : B** |

**(2 x 10 = மொத்தம் 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பிரிவு 2

**விடை 02**

2.1

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 1.3.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 16 |
| இலங்கை உயர் நீதிமன்றின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட விடயங்கள் வருமாறு:<br>• அரசியலமைப்பு விடயங்கள் (Constitutional matters)<br>• அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) பாதுகாப்பு<br>• இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கம் (சிவில் மற்றும் குற்றவியல் இரண்டும்)<br>• ஆலோசனை நியாயாதிக்கம் (Consultative jurisdiction)<br>• தேர்தல் முறைப்பாடுகள் (Election petitions)<br>• பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் (Breach of parliamentary privileges)<br>• உயர்நீதிமன்று மீது பாராளுமன்றம் ஒப்படைக்கும் எந்தவொரு விடயமும். |

2.2

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 2.3.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 63 |
| செல்லுபடியற்ற ஒப்பந்தம் (void contract) சட்டரீதியான விளைவு இல்லாதது ஆதலினால் சம்பந்தப்பட்ட தரப்பினரை கட்டுப்படுத்தாது. அத்தகைய ஒப்பந்தம் பயனற்றதும் செல்லுபடி அற்றதும் (null and void) ஆகும்.<br><br>செல்லுபடியற்றதாகக்கூடிய ஒப்பந்தம் (voidable contract), குறைகளை கொண்டிருந்த போதிலும், ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் அல்லது தொடர்ந்து ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் தேர்வுரிமையை தரப்பினருக்கு வழங்குகின்ற ஒப்பந்தம் ஆகும். |

2.3

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 4.1.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 105 |
| சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கைமாற்றத்தகு சாதனங்கள் சில கீழ்வருமாறு:<br>• பரிமாற்ற உண்டியல்கள் (Bills of exchange)<br>• காசோலைகள் (Cheques)<br>• வாக்குறுதிப் பத்திரங்கள் (Promissory notes)<br>• பங்கிலாப வார்நாமம் (Dividend warrants)<br>• பங்கு வார்நாமம் (Share warrants)<br>• கொண்டுவருபவருக்கு (bearer) செலுத்தவேண்டிய தனிச்சங்கள் |

NOT FOR SALE

2.4

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 7.2.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 213 |
| பணிக்கொடை = (தொழிலின் இறுதிமாதம் பெற்ற சம்பளம்/கூலி) × பூர்த்தி செய்த சேவை ஆண்டுகளின் எண்ணிக்கை<br><br>எனவே தரப்பட்ட சந்தர்ப்பத்தில் சுனிலின் பணிக்கொடை உரித்து<br>= x 75,000 x 18 = Rs 675,000 |

2.5

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 8.2.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 225 |
| உயர் நீதிமன்றத்தினால் பணச்சலவை தடைச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக காணப்படும் எந்தவொரு நபரும் கீழ்வரும் தண்டணைகளில் ஒன்றுக்கு ஆளாவர்<br>• தண்டப்பணம் (ஆதனத்தின் பெறுமதிக்குக் குறையாத, அந்தப் பெறுமதியின் மூன்று மடங்கினை அதிகரிக்காத தொகை).<br>• சிறைத்தண்டனை ( 5 – 25 ஆண்டுகள்)<br>• தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டும்.. |

**(2 x 5= மொத்தம் 10 புள்ளிகள்)**

## பிரிவு 3

**விடை 03**

(a)

| கற்கை வெளிப்பாடு: 2.1.1 |
|---|
| கற்கைப் புத்தக தொடர்பு – 47 |

- *இந்த வினாவில் நாம் தீர்மானிக்கவேண்டியது, சரிகமவினால் ஒப்பந்த கட்டுறுப்பினை மீறியது ஒரு நிபந்தனையா அல்லது உத்தரவாதமா என்பதாகும்.*

- நிபந்தனை ஒப்பந்தத்தின் ஆணிவேர் அல்லது அத்திவாரம்வரை செல்லும் ஒரு விதிமுறை அதனை மீறுதல் ஒப்பந்தம் இரத்துச்செய்யும்.

- உத்தரவாதம் என்பது ஒப்பந்தத்தின் அடிப்படையை பாதிக்காத கட்டுறுப்பு ஆவதுடன், உத்தரவாதம் நிறைவுசெய்யப்பட வேண்டியபோதிலும் அதனை நிறைவுசெய்ய தவறுதல் ஒப்பந்தத்தின் அடிப்படையை பாதிப்பதில்லை.

- *இதேபோன்ற சம்பவம் Bettini v Gye [1876] 1 Q.B.D. 183 வழக்கில் ஆராயப்பட்டது. அங்கு பெற்றினியின் ஒப்பந்தமீறுகை (இசைவிழாவுக்கு ஆறு நாட்களுக்கு முன்னர் ஒத்திகைக்கு வரத் தவறியமை) நிபந்தனை மீறுகை அல்ல எனத் தீர்மானிக்கப்பட்டது. அது ஒரு உத்தரவாத மீறுகை மாத்திரமே. எனவே, ஒப்பந்தத்தை இரத்துச்செய்ய முடியாது. கை என்பவர் ஒப்பந்தத்திற்கு கட்டுப்படுகின்றார்.*

- *தரப்பட்டுள்ள தருநிலைக்கு மேற்படி வழக்கில் தீர்மானித்தை பிரயோகிப்பதன் மூலம் சரிகமவின் மீறுகை ஒரு உத்தரவாத மீறுகையே அன்றி நிபந்தனை மீறுகை அல்ல.*

- *எனவே, சரிகமவுடனான ஒப்பந்தத்தை ரவி இரத்துச்செய்ய முடியாது.*

NOT FOR SALE

(b)

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 2.4.1 | |
| கற்கைப் புத்தக தொடர்பு – 66 | |

<u>வழக்கின் பெயர் :</u>
இதேபோன்ற சம்பவம் ***Taylor v Caldwall (1983- 122 ER 309)*** வழக்கில் ஆராயப்பட்டது.

<u>வழக்குப்பற்றிய தரவுகள் :</u>
T என்பவர் C யிடமிருந்து ஒரு இசை அரங்கினை வாடகைக்கு பெற்றிருந்தார். ஆனால் முதலாவது இசை நிகழ்ச்சிக்கு முன்னரே அரங்கம் தீயினால் அழிந்தது. இந்த நிலையில் சில நிகழ்ச்சியினை ஒழுங்கு செய்ததன்மூலம் T சில செலவுகளை செய்திருந்தார். இந்த செலவு தொடர்பில் அவர் C யிடமிருந்து நட்டஈடு கோருகின்றார்.

தீர்ப்பு : அரங்கம் அழிந்தது எந்தவொரு தரப்பினரதும் தவறினால் அல்ல. எனவே, ஒப்பந்த நிலைகுலைவு (frustration) காரணம்காட்டி இரு தரப்பினரும் ஒப்பந்தத்தின்கீழ் தத்தமது கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்; C யிடமிருந்து இழப்பீடு கோருவதற்கு T உரித்து உடையவரல்ல.

தரப்பட்ட தருநிலையில், இசை அரங்கம் அழிந்தது எந்தவொரு தரப்பினரதும் தவறினால் அல்ல.

அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் நிலைகுலைவு அடைந்ததாகக் கொண்டு இரு தரப்பும் ஒப்பந்தத்தின்கீழ் தத்தமது கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்ட முடியும்.

எனவே, தொம்சன் (T) அதன் விளம்பர முன்னெடுப்பு தொடர்பாக செலவு செய்த கிரயத்தை TPL இடமிருந்து கோருவதற்கு உரித்துடையவர் அல்ல.

**[மொத்தம் = 10 புள்ளிகள்]**

NOT FOR SALE

**விடை 04**

(a)

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 3.3.1 | |
| கற்கைப் புத்தக தொடர்பு – 88 | |

- பொருட்களை வினியோகிக்கக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதற்கு விற்பவர் சில விடயங்களை செய்யவேண்டி இருப்பின், அப்பொருள் மீதான உடமை வாங்குனருக்கு கைமாறுவது, விற்பவர் அந்த விடயங்களை நிறைவுசெய்து அதுபற்றி வாங்குனருக்கு அறிவித்த பின்னர் ஆகும்.

- இதேபோன்ற சம்பவம் ***Philip Head & Sons Ltd*** **v** ***Showfronts Ltd****. [1970] Lloyd's Rep. 140* வழக்கில் ஆராயப்பட்டது.

  இந்த வழக்கில் S என்பவர் P யிடமிருந்து தரைவிரிப்பொன்றினை கொள்வனவு செய்தார். தரைவிரிப்பு விரிக்கப்படவேண்டிய இடத்திற்கு வினியோகித்த பின்னர் அது சில தையல் வேலைகள் செய்யப்படுவதற்காக P க்கு திருப்பி அனுப்பப்பட்டது. அடுத்த நாள் P அவற்றை பெரிய கட்டாக திருப்பியனுப்பிய பின்னர் உடனடியாக அது களவாடப்பட்டது.

  ***தீர்ப்பு***: தரைவிரிப்பு களவாடப்பட்டபோது கட்டுக்களாகவே இருந்தது. இதன் கருத்து தரைவிரிப்பு வினியோகக்கூடிய நிலையில் இருக்கவில்லை என்பதே. எனவே மேற்படி விதி (மேலே 1 இல்) பிரயோகிக்கப்படாததுடன், S கொடுப்பனவு எதனையும் P க்கு செலுத்த வேண்டியதில்லை.

- இப்போது மேற்படி வழக்குத் தீர்ப்பினை தரப்பட்ட தருநிலைக்கு தொடர்புபடுத்துவோம்.

- சமயலறை களஞ்சிய (pantry) அலகுகள் நிருமானிக்கப்பட்டு பொருத்தப்படவேண்டி இருந்ததனால், அது J யின் வாகனத்தரிப்பிடத்தில் வைக்கப்பட்டபோது வினியோகிக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

- இந்தப் பொருட்கள் மீதான உடைமை வாங்குனருக்கு மாறுவது, இரு தரப்பினரும் அது உரிய முறையில் மாற்றப்படுவதாக கருதும்போது ஆகும். இந்த தருநிலையில் உடைமை J க்கு மாற்றப்பட்டதாக கருதப்படுவது, M சனிக்கிழமை அந்த அலகுகளை பொருத்தி இணைத்ததன் பின்னர் ஆகும்.

- எனவே, சமயலறை களஞ்சிய அலகுகள் மீதான உடைமை, அவை திருடப்பட்டபோது J க்கு கைமாறி இருக்கவில்லை.

(b)

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 5.1.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – 124 |

அவசியநிலை காரணமான முகவராண்மை ஏற்படுவது, ஒரு நபரிடம் வேறொரு நபரின் உடமை நம்பிக்கையின்பேரில் ஒப்படைக்கப்பட்டு உள்ளபோது, அந்த உடமையை பாதுகாக்க ஏதாவது செய்தல் அவசியமாகின்ற போது ஆகும்.

அவசியநிலை காரணமான முகாமைத்துவம் ஏற்படுவதற்கு கீழ்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்:

1. முதல்வரின் அறிவுரைகளை பெறுவது சாத்தியமற்றதாக இருத்தல்.
2. முகவராண்மையை ஏற்படுத்துவதற்கு உண்மையானதும் தீர்க்கமானதமான வர்த்தக அவசியத்தன்மை காணப்படுதல்.
3. முகவர் நன்நம்பிக்கையோடு சகல தரப்பினரதும் நன்மைக்காக செயற்பட வேண்டும்.

தரப்பட்டுள்ள தருநிலையில், A யின் தொலைபேசி இலக்கத்தை B வைத்திருந்ததால், அவர் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள A யை தொடர்பு கொண்டிருக்க எனினும் B அவ்வாறு செயற்படவில்லை. எனவே, மேலே முதலாவது நிபந்தனை நிறைவு செய்யப்படவில்லை. எனவே A மற்றும் B க்கு இடையில் அவசியநிலை காரணமான முகவராண்மை ஏற்படவில்லை.

எனவே, விடுதிக் கட்டணம் B யினால் செலுத்தப்பட வேண்டும்.

*இதனை ஒத்த தரவு G.N. Ry v Swaffield [1874] L.R.9Ex.132 வழக்கில் ஆராயப்பட்டது.*
இந்த வழக்கில் புகையிரதம் மூலம் அனுப்பப்பட்ட குதிரையை பொறுப்பு ஏற்பதற்கு எவரும் இருக்கவில்லை. புகையிரத கம்பனி குதிரையின் உரிமையாளரை தொடர்புகொள்ள முடியாது இருந்ததனால் அன்றிரவு குதிரை பராமரிப்பு லாயத்தில் ஒப்படைக்கப்பட்டது.
*தீர்ப்பு :* புகையிரத கம்பனியானது குதிரையை காப்பாற்றுவதற்கு ஏதாவது செய்யவேண்டி இருந்ததனாலும், முதல்வரை தொடர்புகொள்வது சாத்தியமற்றதாக இருந்ததனாலும் அவசிய நிலை காரணமாக முகாமைத்துவம் ஏற்பட்டுள்ளது. எனவே முதல்வர் உரிய பராமரிப்புச் செலவினை குதிரை லாயத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

அல்லது

Springer Vs G.W.RY 1921)
வழக்கின் தரவுகள்:
ஜேர்செயிலிருந்து லண்டனுக்கு S இனால் தக்காளிப் பழத் தொகையொன்று அனுப்பப்பட்டது. புகையிரதத் துறை வேலை நிறுத்தம் காரணமாக 2 நாட்கள் வரை தக்காளிப் பழங்களை புகையிரதத்திலிருந்து இறக்கமுடியாதமையினால், மூன்று நாட்களின் பின்னரே அவை வேய்மவுத்தில் வினியோகிக்கக்கூடியதாக இருந்தது. அவை இறக்கப்பட்டபோது பழுதடைந்து காணப்பட்டமையால், அவற்றை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டது. S உடன் தொடர்பாடல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தீர்ப்பு: S உடன் தொடர்புகொண்டு அறிவுறுத்தலை பெற தவறியமையால், புகையிரத கம்பனி S க்கு நட்டஈடு வழங்கவேண்டி ஏற்பட்டது.

**[மொத்தம்: 10 புள்ளிகள்]**

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளு அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

---

NOT FOR SALE